


பல்லாவரத்தில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். அருகில் மாவட்ட கழக நிர்வாகிகள் த.துரைசாமி, இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, வெ.விசுவநாதன் மற்றும் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தவறி – துணைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்கள்

# அரசு கலை - அறிவியல் கல்லூரிகளில் - இளநிலைப் படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 29 -

**12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தவறிய மாணாக்கர்களின் உயர்கல்வி கனவை நனவாக்க துணைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இக்கல்வியாண்டே (2025-26) இள நிலை பட்டப்படிப்பில் சேர விண்ணப் பிக்கலாம் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவித் துள்ளார்.**



இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது :

ஏழை, எளிய மாணாக்கர்கள் உயர் கல்வியினைப் பெற வேண்டும், அனை வருக்கும் சமமான உயர்கல்வி கிடைத் திட வேண்டும் என்பதற்காக, அரசுக் கல்லூரி இல்லாத பகுதிகளில் நடப்பாண் டில் மட்டும் புதியதாக 15 அரசு கலை மற் றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங் கிட முதலமைச்சர் அவர்களால் ஆணை யிடப்பட்டு, அவ்விடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், மாணவர்களின் தேவைக் கேற்ப 15,000க்கும் மேற்பட்ட மாணாக் கர் சேர்க்கை இடங்கள் பல்வேறு பாடப் பிரிவுகளில் உருவாக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறி வியல் கல்லூரிகளில் 2025-2026ஆம் கல்வியாண்டிற்கான மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு 07.05.2025 இல் தொடங்கி தற்போது முதலா மாண்டு வகுப்புகள் தொடங்கப் பட்டுள்ளன.

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தவ றிய மாணாக்கர்கள் தாங்கள் உயர் கல்வி வாய்ப்பைத் தவறவிட்டோம் என்று சோர்வடைந்து விடாமல் இருக்க, உயர்கல்வி வாய்ப்பினைப் பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் அவர்க ளுக்கு உடனடியாக துணைத் தேர்வு நடத்தப்பட்டு தற்போது தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்கள் இக்கல்வி யாண்டே உயர்கல்வி பயில ஏதுவாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி களில் இளநிலை முதலாமாண்டு மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண் ணப்பப் பதிவினை www.tngasa.in என்ற இணையதள முகவரியில் விண் ணப்பிப்பதற்கு உரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, மாணாக்கர்கள் மேற்குறிப் பிட்டுள்ள இணையதளத்தில் விண்ணப் பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கி றேன்.

இவ்வாறு உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இந்து சமய அறநிலையத்துறைத் திட்டங்களின் செயல்பாடுகள் -

# சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த சீராய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது.

சென்னை, ஜூலை 29

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (28.07.2025) ஆணையர் அலு வலகத்தில் இந்து சமய அறநி லையத்துறை திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் சட்ட மன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 35வது சீராய்வுக் கூட்டம் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், 2021 2022 ஆம் நிதியாண்டு முதல் 2025 2026 நிதியாண்டு வரையிலான சட்டமன்ற அறிவிப்புகளில் நிறை வேற் றப்பட்ட அறிவிப்புகளை தவிர இதர அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித் தும், குறிப்பாக ஒருங்கி ணைந்த பெருந்திட்ட வரை வின் (Master Plan) கீழ் நடை பெற்று வரும் திருப்பணிகள், 1,000 ஆண்டுகளுக்கு முற் பட்ட தொன்மையான திருக்கோயில் திருப்பணிகள், கிராமப்புற மற்றும் ஆதிதிரா விட மக்கள் வசிக்கும் பகுதி யிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகள், பக்தர்களுக் கான வசதிகளை மேம்படுத்தி வழங்கிடும் வகையில் நடை பெற்று வரும் பணிகள் ஆகி யவற்றின் முன்னேற்றம் குறித்தும், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலி ருந்து மீட்டெடுக்கும் பணி கள் மற்றும் நில அளவை பணிகள் குறித்தும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், புதிய திருத் தேர் கள் உருவாக்கும் பணிகள், மராமத்து பணிகள் மற்றும் திருத்தேர் கொட்டகைகள் அமைக்கும் பணிகள், திருக்கு ளங்களை சீரமைக்கும் பணி கள், உலோகத் திருமேனி பாதுகாப்பு அறை கட்டுமா னம், பசுமடங்களை மேம்ப டுத்துதல், மலைத் திருக்கோ யில்களுக்கு கம்பிவட ஊர்தி மற்றும் மின்தூக்கி அமைத் தல் போன்ற பணிகளின் முன் னேற்றம் குறித்தும், திருக் கோயில் யானைகள் பரா மரிப்பு, மூத்த குடிமக்களு க்கான கட்டணமில்லா ஆன் மிகப் பயணங்களின் செயல் திட்டம், திருக்கோயில்களில் அமைக்கப்பட்டுள்ள மருத் துவ மையங்களின் செயல்பா டுகள், திருக்கோயில் அலுவ லர்கள் மற்றும் பணியாளர்க ளின் நலன் சார்ந்த திட்டங் கள், திருக்கோயில்களில் வழங்கப்படும் அன்னதானம் மற்றும் பிரசாதத்தின் தரத் தினை உறுதி செய்திட அமைக்கப்பட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்களின் பணி முன்னேற்றம், திருக் கோயில்கள் சார்பில் நடத்தப் படும் பயிற்சிப் பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஆகியவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட் டது.

நிறைவாக, அமைச்சர் பேசுகையில், முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்து றையில் பல்வேறு முனைப் பான திட்டங்கள் செயல்ப டுத்தப்பட்டு அனைத்து தரப்பினரிடத்திலும் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளன. இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு பல்வேறு திட்டங்களுக்கு அதிகளவில் அரசு மானியங்களை முதல மைச்சர் அவர்கள் வழங்கியி ருகின்றார்கள். ஆகவே, துறை அலுவலர்கள் மற்றும் பொறி யாளர்கள் அறிவிக்கப்பட்ட திருப்பணிகள் அனைத்தை யும் குறித்த காலத்தில் நிறை வேற்றிடும் வகையில் கள ஆய்வு மேற்கொண்டு விரைந்து பணியாற்றிட வேண்டுமென அறிவுரை களை வழங்கினார்.

முன்னதாக அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம், அருள் மிகு ஏகாம்பரநாதர் திருக் கோயிலில் பணிபுரிந்து பணி காலத்தில் உயிரிழந்த பணி யாளரின் வாரிசுதாரர் திரு மதி கே.நிர்மலாவுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலை யங்கள் துறை கூடுதல் தலை மைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக் டர் சி.பழனி, திருமதி ந.திரு மகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, பொ. ஜெயராமன், திருமதி கொ. சே.மங்கையர்க்கரசி, தலை மைப் பொறியாளர் பொ. பெரியசாமி, மாவட்ட வரு வாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணை யர்கள் மற்றும் பொறியாளர் கள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (28.07.2025) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 35வது மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா. தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, அனைத்து மண்டல இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை திறப்பு விழா – 25 ஆயிரம் ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா – நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

# தாம்பரம் - பல்லாவரத்திற்கு ஆகஸ்ட் - 9 வருகை தரும் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## காஞ்சி வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், ஜூலை 29-

ரூ.137 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனை திறப்பு விழா - 25 ஆயிரம் ஏழைகளுக்கு வீட் டுமனை பட்டா - நலத் திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் விழாவிற்கு தாம் பரம் - பல்லாவரத்திற்கு ஆகஸ்ட் - 9 வருகை தரும் முதல்வர் அவர்களுக்கு 3 இடங்களில் உற்சாக வர வேற்பு அளிப்பது என காஞ் சிபுரம் வடக்கு மாவட்டக் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டுள்ளது என்று மாவட் டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறி யுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் பல்லாவரம், 200 அடி ரேடியல் சாலையில் அமைந்துள்ள சுரபி மகால் திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் த.துரை சாமி தலைமையில் நடை பெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணா நிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பர சன் தொடக்கத்தில் அனை வரையும் வரவேற்று பேசி னார்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், ரஃபி அகம்மது, பரிதி இளம்சு ருதி, எஸ்.எம்.கே.அண்ணா துரை, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் வீ. தமிழ்மணி, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலை வர் படப்பை ஆ.மனோகர ரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காம ராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செ ழியன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, எஸ்.இந்தி ரன், டி.காமராஜ், பெருங்க ளத்தூர் சேகர், மாடம்பாக் கம் நடராஜன், ஏ.கே. கருணாகரன், இ.எஸ்.பெர் னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணா நிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோக நாதன், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நக ரச் செயலாளர்கள் டி.பாபு, ஜெ.சண்முகம், எஸ்.ஜப ருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர். சதீஷ்குமார், த.வினோத் குமார், பேரூர் செயலாளர் கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவ ராஜ்,

தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற் றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெய காந்த் பாரதி, கழக மருத் துவ அணி துணைச செயலா ளர் மருத்துவர் கிருத்திகா தேவி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், கே.எத்திராஜ், க.தேவேந்திரன், ஆர்.எஸ். சங்கர், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், சே.அருள் தேவி, மு.ரஞ்சன், செல்வகு மார், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர் கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், டி.கே.கமலகண்ணன், கே. மணிகண்டன், கோ.ஜானகி ராமன், எல்.பிரபு, எஸ்.ஆல் பர்ட், ஜா.செந்தில்தேவ ராஜ், பா.ஞானபிரகாசம், சசிகலா, டி.பி.செந்தில்கு மார், பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர். கோவிந்தன், வி.ரவிச்சந்தி ரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண் ணன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத் தியபிரபு, முகலிவாக்கம் தங் கம் வாட்ஸ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட இரங்கல் தனி தீர்மானம்:-

தாம்பரத்தில் வருகிற ஆகஸ்ட் 9-ஆம் தேதி ரூ.137 கோடி மதிப்பீட்டில் கட் டப்பட்டுள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவம னையை திறந்து வைக்கி றார்.

அதன் பிறகு அவர், பல் லாவரம் பழைய டிரங்க் சாலையில் நடைபெற உள்ள இலவச வீட்டு மனைப் பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங் கும் மாபெரும் விழாவில் கலந்து கொண்டு 25 ஆயிரம் ஏழை, எளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் இல வச வீட்டுமனை பட்டாக்க ளும் வழங்கி பேருரை ஆற்ற உள்ளார்.

இம்மாபெரும் விழாவில் கலந்து கொள்ள தாம்பரம் மற்றும் பல்லாவரத்திற்கு வருகை தரும் நம்முடைய ஒப்பாரும், மிக்காரும் இலா நம் நெஞ்சம் நிறைந்த அன் புத்தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்க ளுக்கு, அன்று காலை 8.00 மணியளவில் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகி லும், குரோம்பேட்டை இர யில் நிலையம் அருகிலும், தாம்பரம் அரசு மருத்துவ மனை அருகிலும், கழகத்தி னர் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து உற்சாக வர வேற்பு அளிப்பது என்றும்,

மேலும், பல்லாவரத்தில் நடைபெறும் அரசு நலத் திட்ட உதவிகள் - வீட்டு மனை பட்டாக்கள் வழங் கும் மாபெரும் விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனை வரும் பல்லாயிரக் கணக்கில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்பது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஒரு மன தாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அவர் கூறி யுள்ளார்.

# இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு பிரச்சினையை தீர்த்து வைக்கப்போவது எப்போது?

## மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 29-

உலகில் அதிக மக்கள் தொகையை கொண்ட நாடு இந்தியா. ஆனால் மக் களின் வேலைநேரம் அதி கம் இருக்கும் நாடுகளில் இந்தியா 13வது இடத்தில் உள்ளது. அதுமட்டுமின்றி பணிக்கேற்ற ஊதியம் கிடைக்கிறதா என்பதும் கேள்விக்குறியே. மனித மேம்பாட்டு நிறுவனம் மற் றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) இணைந்து 2024 ஆண்டு உருவாக்கிய இந்திய வேலைவாய்ப்பு அறிக்கையின்படி, 2011ஆம் ஆண்டு இந்தியாவின் உழைக்கும் மக்கள் தொகை 61 சதவீதத்திலிருந்து 2021ஆம் ஆண்டு 64 சதவீத மாக அதிகரித்துள்ளது, மேலும் இது 2036ஆம் ஆண்டு 65 சதவீதத்தை எட் டும் என்று கணிக்கப்பட் டுள்ளது. இருப்பினும், பொருளாதார நடவடிக்கை களில் ஈடுபடும் இளைஞர்க ளின் சதவீதம் 2022ஆம் ஆண்டு 37 சதவீதமாகக் குறைந்துள்ளது. நிலையான வேலைவாய்ப்பு வளர்ச் சியை வளர்ப்பதற்கும் நாட் டின் எதிர்கால செழிப்பைப் பாதுகாப்பதற்கும் தொடர்ச்சியான விழிப்பு ணர்வு மற்றும் பயனுள்ள கொள்கை நடவடிக்கைகள் மிக முக்கியமானவை.

எனவேதான் நாடாளு மன்றத்தில், கழக நாடாளு மன்ற குழுத் துணைத்தலை வரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரு மான திரு.தயாநிதி மாறன் அவர்கள் வேலைவாய்ப்பு குறித்து பல்வேறு கேள்வி களை எழுப்பியுள்ளார்

அதன் விவரங்கள் வரு மாறு :-

நாட்டின் தற்போதைய வேலைவாய்ப்பின்மை சத விகிதத்தை கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முன்பிருந்த நிலையோடு ஒப்பிட்டு அதன் விவரங் களை வயது, பாலினம் மற் றும் மாநிலம் வாரியாக தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

அதிகரித்து வரும் இளை ஞர்களின் வேலைவாய்ப் பின்மை பிரச்சனையை தீர்க்கவும், அமைப்பு சாரா துறைகளில் திறன் மேம் பாடு மற்றும் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவ தற்கும் கடந்த 5 ஆண்டு களில் ஒன்றிய அரசு மேற் கொண்ட நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பி னார்



அமைப்புசாரா மற்றும் ஒப்பந்த அடிப்படையி லான பணிகளின் வளர்ச்சி குறித்து ஒன்றிய அரசு ஏதே னும் மதிப்பீடு செய்துள் ளதா? எனில் அதுபோன்ற பணியாளர்களின் நிலை யான வருமானம், பணி நிரந்தரம் மற்றும் சமூக பாதுகாப்பு குறித்த நிலை என்ன? என கேள்வி எழுப் பினார்.

நாடு முழுவதும் குறைந் தபட்ச ஊதிய சட்டம் மற் றும் பாதுகாப்புச் சட் டத்தை கண்காணிப்பு வழிமுறைகளோடு உறுதிப் படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக் கைகள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை அல்லது அவர்க ளுக்கு உதவும் வகையில் ஏதேனும் புதிய திட்டங்களை ஒன்றிய அரசு பரிசீலிக்கிறதா? ஆம் எனில், அது என்ன திட்டம்? அதன் தற்போதைய நிலை என்ன? அப்படியான திட்டங்கள் இல்லை என்றால் அதற் கான காரணம் என்ன? என வும் கேள்வி எழுப்பினார்.




சென்னை மேற்கு மாவட்ட கழக ஆலோசனை கூட்டம் நேற்று (28.07.2025) காலை மாவட்டக் கழக அலுவலகம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதல் தெருவில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் விருகம்பாக்கம் பகுதி வார்டு 128–ல் வட்டக் கழகச் செயலாளர் கோவிந்தராஜன் தலைமையில் தாங்கல் ஏரிக்கரை, தமயந்தி தெரு உள்ளிட்ட இடங்களில் உறுப்பினர் சேர்க்கையில் மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் பங்கேற்றார். வட்ட கழக நிர்வாகிகள் BLA2, BLC மற்றும் BDA உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.